2. இரங்கல் தீர்மானம்

டாக்டர் கா. காளிமுத்து, பேரவை முன்னாள் தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானம். டாக்டர் கா. காளிமுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் தலைவர் அவர்கள் மறைவு குறித்து.

"மாணவப் பருவத்திலேயே திராவிட இயக்கப் பற்றாளராகத் தொடங்கி, பின்னர் மொழிப்போர்த் தியாகியாக விளங்கியவரும், எழுத்து, பேச்சு இரண்டிலும் திறன் பெற்றவராகத் திகழ்ந்தவரும், நட்புக்கும் நல்ல தோழமைக்கும் ஏற்றவராக, அரசியல், இலக்கியம் ஆகிய இரண்டிலும் சிறந்தவராக, இனிய பண்பும் செயல் திறனும் கொண்டவராக வாழ்ந்தவரும், 2001 முதல் 2006 வரை பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவையின் தலைவராகச் சிறப்புறப் பணியாற்றி, அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்துச் செல்லும் பண்பால் அனைவரது பாராட்டுதலைப் பெற்றவருமான டாக்டர் கா. காளிமுத்து அவர்கள், 8–11–2006 அன்று தனது 64–வது அகவையில் இயற்கை எய்தியது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

முற்பகல் 9–35

டாக்டர் கா. காளிமுத்து அவர்கள், தன்னுடைய சிறு வயது முதல் மேடைப் பேச்சில் ஆற்றல் மிக்கவராகவும், தேவநேயப் பாவாணர் அவர்களின் வழியில் நின்று தமிழ் உணர்வை வளர்த்தவராகவும் இருந்தவர். அவர் பல்வேறு தமிழ் இலக்கிய நூல்களை எழுதியவர். மேலும், அவர் 1971 முதல் 1976 வரை, 1977 முதல் 1980 வரை, 1980 முதல் 1984 வரை, 1985 முதல் 1988 வரை மற்றும் 2001 முதல் 2006 ஆகிய ஆண்டுகளில் ஐந்து முறை சட்டப் பேரவை உறுப்பினராகவும், 1989 முதல் 1991 வரை நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1977 முதல் 1986 வரை தமிழக அமைச்சராகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும்முகத்தானும், மறைந்த இம்மாமனிதருக்கு மரியாதை செலுத்தும்வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை (5–12–2006) செவ்வாய்க்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 9–37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS